## தமிழர்களின் பெருமையை பறைசாற்ற

# வரலாற்றுப் பதிவுகள் மிக அவசியமாகும்!

### மலேசியாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் டத்தோ ஸ்ரீ சரவணன் பேச்சு!

கோலாலம்பூர், டிச. 31 –

திருக்குறளை எடுத்துக்கொண்டால், அது இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்த ஒரு இலக்கியம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய தமிழர்களின் நாகரிகம், பண்பாடு உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை இது நிரூபிக்கிறது. ரோமானிய பேரரசுடன் தமிழர்கள் வாணிபம் செய்த வரலாறையும் நாம் மறக்க முடியாது என்று மஇகா தேசியத் துணைத்தலைவர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் தெரிவித்தார்.

இது போன்ற காலகட்டங்களில், நம்முடைய சோழர்களின் வரலாறும், குறிப்பாக ராஜராஜ சோழரின் வரலாறும் சரியாக பதிவு செய்யப்படவில்லை என்றால், அடுத்த தலைமுறைக்கு நம்முடைய பண்பாடும் பெருமையும் தெரியாமல் போய்விடும். அதனால் தான் இது போன்ற வரலாற்றுப் பதிவு மிக அவசியமானதாக கருதப்படுகிறது என்றும் டத்தோ ஸ்ரீ சரவணன் குறிப்பிட்டார்.

ம.இ.கா. தலைமையகம், நேதாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் நூல்கள் வெளியீட்டு விழா விற்கு தலைமையேற்று உரையாற்றுகையில் டத்தோஸ்ரீ சரவணன் மேற்கண்டவாறு கூறினார்.

வெளிநாட்டு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம், மலேசிய தமிழர்கள் சங்கம், மஇகா மற்றும் மாமன்னர் ராஜராஜ சோழர் வரலாற்று ஆய்வு, பண் பாட்டு மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தலைமையேற்று சிறப்பு வருகைப் புரிந்திருந்தார்.

தி.மு.க. ஆட்சியில் அயலக தமிழர் நலனும் தமிழ் மொழி வளர்ச்சியும் என்ற நூல்களின் ஆசிரியர் ஸ்ரீதரன் கல்யாண சுந்தரம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தி.மு.க. ஆட்சியில் அயலக தமிழர்கள் நலனை காக்கவும் தமிழ் வம்சாவளி இளம் தலை முறையினர் எளிதாக தாய்மொழியான தமிழை கற்கவும் தாய் தமிழ்நாட்டுடன் என்றுமே தொடர்பில் இருப்பதற்கு பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளார் என்றும்,சோழ பேரரசர்கள் வரலாற்று நூல் வருங்கால தலைமு றைக்கு சென்று சேர எளியநடையில் எழுதப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்

எம்.கே. மணிகண்டன் வரவேற்புரையுடன் சிங்கப்பூர் தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நல வாரிய உறுப்பினர் ஜி.வி. ராம் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மஹ்சா பல்கலைக்கழகத்தின் நிர்வாகத் தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் முகம்மது ஹனிபா, கிரீன்பாக்கெட் நிறுவனத்தின் தலைமைச் செயல்முறை அதிகாரி டத்தோ ஷாகுல் தாவூத், தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நல வாரிய உறுப்பினர் முகம்மது ஃபைசல், மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அயலகத் தொடர்புக்குழு தலைவர் பெ. இராஜேந்திரன் ஆகியோர் சிறப்பு பிரமுகர்களாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

இன்று வெளியிடப்படும் இந்த நூல், சரியான காலத்தில், சரியான தேவைக்காக வந்திருக்கிறது என்று டத்தோஸ்ரீ சரவணன் தமது உரையில் குறிப்பிட்டார். இந்த கூட்டத்தில் ராஜ ராஜ சோழரின் பெருமையை உணர்ந்த பலரும் இருப்பது மகிழ்ச்சியான விஷயமாகும்.

உண்மையான செய்திகள் சமூகத்திற்கு சென்று சேர வேண்டும். வரலாறு திரித்து சொல்லப்படக் கூடாது. தமிழ் நாட்டின் வரலாற்றை நாம் நேர்மையாகப் பார்த்தால், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவை பாதுகாக்கப்பட்ட காலம் திராவிட ஆட்சிக்காலம்தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

அயலகத்துறை என்பது ஒரு சாதாரணத் துறை அல்ல. அது ஒரு நாட்டின் வெளியுறவுத் துறைக்கு இணையான முக்கியத்துவம் கொண் டது. அந்த அளவிற்கு பொறுப்புடன், தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டியும் தமிழர்களின் நலனை காக்கும் பணிகள் நடைபெற்று வந்துள்ளன.

எங்களைப் பொருத்தவரை, இது ஒரு அரசியல் கட்சி சார்ந்த விஷயம் அல்ல. தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டி, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை, மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதே நம்முடைய நோக்கமாகும்.

இந்த அரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும், இந்த நூலை வெளியிட்ட அனைவருக்கும் டத்தோஸ்ரீ சரவணன் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டார்.




கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர் ஊராட்சி ஒன்றியம் முத்தாலி ஊராட்சி பூதிநத்தம் கிராமத்தில் புதிதாக நியாய விலைக் கடையை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் திறந்து வைத்தார். பின்னர் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி சூளகிரி ஊராட்சி ஒன்றியம் உத்தனப்பள்ளி, தேவசானப்பள்ளி, சின்னபேட்டகானப்பள்ளி கிராமங்களில் தார் சாலை சிமெண்ட் சாலை , மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி , புதிய வகுப்பறை கட்டடங்கள் உள்ளிட்ட பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் , மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், துணை மேயர் ஆனந்தய்யா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வீரா ரெட்டி, ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திர மூர்த்தி, அப்பையா, பாக்யராஜ், நாகேஷ், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ரஷீத் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் எலுமிச்சன அள்ளியில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தருமபுரி கிழக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி புதிய நியாய விலைக் கட்டிடத்தினை திறந்து வைத்து விலையில்லா உணவுப்பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலார் வழக்கறிஞர். எம்வீடி.கோபால், எஸ்.முனியப்பன், வழக்கறிஞர் டி.சந்திரசேகர், ஏ.வி.குமார், பி.டி.ஹரிபிரசாத் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



100 நாள் வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் எலச்சிபாளையம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எலச்சிபாளையம் ஒன்றியத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்,மூர்த்தி தலைமையிலும், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.தங்கவேல், செல்வராஜ், ராமசாமி, மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட3000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஜனவரி 1 முதல் நெல்லை, முத்துநகர், பொதிகை உள்ளிட்ட 7 ரயில்களின் நேரம் மாற்றம்!

சென்னை, டிச.31–

ஜன. 1ம் தேதி முதல் விரைவு ரயில்களின் நேர அட்டவணை மாற்றி அமைக்கப்பட உள்ளது. தண்டவாளங்கள் மேம்படுத்தப்பட்டு, மின் மயமாக்கல் பணிகள் முடிவடைந்த நிலையில் புதிய அட்டவணை வெளியானது. புதிய அட்டவணையின்படி வருகின்ற 2026 ஜனவரி 1ம் தேதி முதல், சென்னை எழும்பூரில் இருந்து தென் மாவட்டங்களுக்கு புறப்படும் ரயில்களின் நேரம் மாற்றப்பட்டுள்ளது. அதேபோல் மறு மார்க்கத்தில் தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வரும் ரயில்களின் நேரமும் மாற்றப்பட்டுள்ளது என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

1. சென்னை எழும்பூரில் இருந்து திருச்சிக்கு செல்லும் சோழன் எக்ஸ்பிரஸ் காலை 7:45 மணிக்கு பதிலாக காலை 8:00 மணிக்கு புறப்படும்.

2. சென்னை எழும்பூரில் இருந்து குருவாயூர் வரை செல்லும் எக்ஸ்பிரஸ் காலை 10:20 மணிக்கு பதிலாக, காலை 10:40 மணிக்கு புறப்படும்.

3. எழும்பூரில் இருந்து மதுரைக்கு செல்லும் வைகை எக்ஸ்பிரஸ், மதியம் 1:45 மணிக்கு பதிலாக 30 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது 1:15 மணிக்கு புறப்படும்.

4. எழும்பூரில் இருந்து திருநெல்வேலி வரை செல்லும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் மதியம் 2:45 மணிக்கு பதிலாக 3:05 மணிக்கு புறப்படும்.

5. எழும்பூரில் இருந்து தூத்துக்குடி வரை செல்லும் முத்துநகர் எக்ஸ்பிரஸ் இரவு 7:30 மணிக்கு பதிலாக, இனி 15 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது, 7:15 மணிக்கு புறப்படும்.

6. எழும்பூரில் இருந்து இரவு 8:10 மணிக்கு செல்லும் பொதிகை எக்ஸ்பிரஸ், இனி 35 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது, 7:35 மணிக்கு புறப்படும்.

7. எழும்பூரில் இருந்து இரவு 7:15 மணிக்கு புறப்பட்டு செல்லும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், இனி 8:35 மணிக்கு புறப்படும்.

8. எழும்பூரில் இருந்து இரவு 8:40 மணிக்கு புறப்பட்டு செல்லும் நெல்லை எக்ஸ்பிரஸ், இனி 8:50 மணிக்கு புறப்படும்.

எழும்பூரில் இருந்து திருச்செந்தூர் வரை செல்லும் செந்தூர் எக்ஸ்பிரஸ் மற்றும் கேரளாவின் கொல்லம் வரை செல்லும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்களின் நேரம் மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் காரப்பிடாகை வடக்கு ஊராட்சியில் பாகம் எண்:168ல் என் வாக்குச் சாவடி, “வெற்றி வாக்குச் சாவடி” பொதுக்கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் அதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 30 குடும்பத்தினர் அக்கட்சியில் இருந்து விலகி ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராஜன்.வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் மாவட்டப் பிரதிநிதி ஞானசேகரன், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் முகம்மது ரபீக், கிளைச் செயலாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.


21ஆம் ஆண்டு நினைவேந்தல்

தோற்றம்
09.07.1933



மறைவு
31.12.2004

என் அப்பனல்லவா, என் தாயுமல்லவா
நின் ஆழ்ந்த கருணையை
நினைந்து நினைந்து கரைகிறேன்...

திரு. ஆலடி அருணா M.A.B.L

என்றும் உங்கள் புகழ் நிலைத்திட உங்கள் வழியில்

டாக்டர். வே. பாலாஜி
நிறுவனர், ஆலடி அருணா அறக்கட்டளை

டாக்டர். பூங்கோதை ஆலடி அருணா
திமுக மாநில சுற்றுச் சூழல் அணி தலைவர்
ஆலடி அருணா அறக்கட்டளை